1973 பிப்ரவரி 5]

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணி கிடைப்பதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் மற்ற நாடுகளில், சிலோன், தாய்லாந்து போன்ற நாடுகளிலெல்லாம் மிளகாய் ஏற்றுமதி செய்கின்றார்கள். அவர்களுக்கு இம்போர்ட்டு லைசென்ஸ் கிடைக்கிறது, அதனால் அந்த விலையைச் சரிக்கட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இதைப் பற்றி ஸ்பைஸஸ் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் கூட எழுதியிருக்கிறார்கள். ஆகையினால் இதை நாம் அனுப்பி கிடைக்கக் கூடிய செலாவணியை வைத்துக்கொண்டு, அதற்குரிய தொகையிலிருந்து, அதிகப்படியாக ஒன்றும் நமக்குக் கிடைத்து விடுவதில்லை, நமக்குக் கிடைத்த செலாவணியைக் கொண்டு உள்நாட்டில் இருக்கக்கூடிய மற்ற விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நான் முதலிலேயே குறிப்பிட்டேன் இது அன்னியச் செலாவணிப் பயிர் என்று. மத்திய சர்க்காரிலிருந்து இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமே தவிர, நாம் அதற்கு வேண்டிய சிபார்சுதான் செய்யலாம்.

Tourist buses to hill stations.

* 16 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state:

(*a*) whether it is a fact that the Tamil Nadu Tourism Development Corporation Limited is conducting tours to hill stations; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) மலை வாழ் இடங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா நிறுவனம் சுற்றுப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்யவில்லை; ஆனால் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் கோடையில் உல்லாசப் பயணிகள் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்கிறது.

(இ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு இரண்டு உல்லாசப் பயண பேருந்துகள் வாங்கி உதகையில் மூன்று சுற்றுப் பயணங்களுக்கு 1972 ஆம் ஆண்டு கோடையில் ஏற்பாடு செய்தது. அதன் விபரம்

[1973 பிப்ரவரி 5

பயணம் 1—உதகை—முதுமலை
ஒருவருக்குக் கட்டணம் ரூ. 25.

"கோல்ப்லிங்க்—இந்துஸ்தான் புகைப்படத் தொழிற்சாலை—சந்திநல்லா—கிளன்மோர்கன்—தேயிலைத்தோட்டத் தொழிற்சாலை—பைகாரா அணை—நடுவட்டம்—கூடலூர் (காபி தோட்டம்)—முதுமலை சரணாலயம்—ஜெயதேவ் அவின்யூ—தெப்பக்காடு—யானை முகாம்—சுற்றுலா மாளிகை, உதகை".

பயணம் 2—உதகையில் சுற்றுலா
ஒருவருக்குக் கட்டணம் ரூ. 5.

"சுற்றுலா மாளிகை—தாவரப்பூங்கா—சாரிங்கிராஸ்—குதிரைப் பந்தய மைதானம்—ஏரி (30 நிமிடங்கள்)—கண்டல்—ஃபிங்கர் போஸ்ட்—வென்லாக் படுகை—இந்துஸ்தான் புகைப்படத் தொழிற்சாலை—தமிழகம்—சுற்றுலா மாளிகை".

பயணம் 3—உதகை—வெலிங்டன்—கூனூர்—கோத்தகிரி.
ஒருவருக்குக் கட்டணம் ரூ. 5.

"சுற்றுலா மாளிகை—பள்ளத்தாக்கு—அருவங்காடு—வெலிங்டன்—சிம்ஸ் பூங்கா—கூனூர்—கோத்தகிரி—சுற்றுலா மாளிகை, உதகை".

சென்னை நகரில் தற்போது இக்கழகம் கீழ்க்கண்ட சுற்றுப் பயணங்களை நடத்தி வருகிறது.

1. சென்னை—காஞ்சீபுரம்—திருக்கழுக்குன்றம்—மாமல்லபுரம்—வேடந்தாங்கல்—சென்னை.

(இந்தச் சுற்றுப்பயணம் தினமும் உண்டு—ஒருவருக்குக் கட்டணம் ரூ. 18.)

2. திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களில் சென்னை நகரைச் சுற்றிப் பார்ப்பது—ஒருவருக்குக் கட்டணம் ரூ. 5.

THIRU N. DENNIS: May I know whether the tours will be conducted on no profit basis so as to enable the persons of low income groups to participate and get the benefit of such tours?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சுற்றுலா நிறுவனம் இலாபத்திற்காக இயங்கக்கூடிய ஒரு நிறுவனமாகும். ஆகவே, இலாப நஷ்டத்தைப் பார்க்காமல்—இலாபம் இல்லாமல் இயங்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வதற்கில்லை.